<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>
<u>O.S.No.448/2019</u>

23.10.2024 வா.சா. 1 திரு. பாலசுப்பிரமணியன்

<u>4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

1. 3 ம் பிரதிவாதி கோமதியின் பிறந்த தேதி எனக்கு தெரியாது. 3 ம் பிரரதிவாதிக்கு தச்சநல்லூர் தான் சொந்த ஊர் என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதியின் கணவருக்கும் சொந்த ஊர் தச்சநல்லூர் தான். 3 ம் பிரதிவாதி எங்கு பணிபுரிந்தார் என்றால் நெல்லை மாநகராட்சி பள்ளி பேட்டையில் பணிபுரிந்து 2008 ல் பணிஓய்வு பெற்றார்.
2. நான் தாக்கல் செய்த திருமண அழைப்பிதழில் எனது தாயார் பெயர் தில்லை கோமதி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், எனது தந்தைக்கு 2 மனைவி முதல் மனைவி பெயர் தில்லை, எனது தாயார் 2 வது மனைவி அவர் பெயர் கோமதி. பொது வாக எல்லா ஆவணங்களிலும் தில்லை கோமதி என்று தான் குறிப்பிடுவது வழக்கம். 3 ம் பிரதிவாதி திருநெல்வேலியை தவிர வேறு எங்கும் வசிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.11, விருதுநகர் ரோசரபட்டி கிராமத்தில் முருகன் என்பவரின் குமாரர் பாலசுப்பிரமணியன் என்பவருக்காக வழங்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான்.
3. 3 ம் பிரதிவாதி சைவ வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். எனக்கு வழங்கப்பட்ட வா.சா.ஆ–11 ல் நான் வீரகோடி வெள்ளாளர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், எனது தந்தையின் சமூகம் வீரகோடி வெள்ளாளர் ஆகும். எனது மனைவி சைவ வெள்ளாளர் சமூகத்தை சார்ந்தவர்.
4. எனது மனைவியின் சாதி சான்றிதழ் என்னிடம் உள்ளதா என்றால் அவர் சைவ வெள்ளாளர் வகுப்பை சார்ந்தவர் என்பதால் அவருக்கு சாதி சான்றிதழ் இல்லை. வீரகோடி வெள்ளாளர் என்பது பிற்படுத்தப்பட்ட சமூதாயம் என்றால் சரிதான்.

5. நான் பிற்படுத்தப்பட்ட சமூதாயத்திற்கான இட ஒதுக்கீட்டில் தான் வேலை வாங்கியுள்ளேன். 3ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்துள்ளேன். அதில் நான் 3ம் பிரதிவாதியின் வயிற்றில் பிறந்த பிள்ளை இல்லை என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான், ஆனால் அது தவறானது. என்னுடைய சமூகமும் வேறு என்பதால் நான் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக 3ம் பிரதிவாதி கட்சி செய்துள்ளார் என்றால் அது தவறானது.
6. எனது தந்தையின் சாதி சான்றிதழ் என்னிடம் இல்லை. நான் பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எனது வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் சரியல்ல.

<u>5,6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

1. காலம் சென்ற முருகன் என்பவருக்கு 2 மனைவிகள் உள்ளதால் அவருக்கு வாரிசு சான்றிதழ் வழங்க முடியாது என்று 16.10.2019 அன்று மேலெழுத்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வருவாய் துறையின் கூடுதல் சுற்றிக்கை எண்.9/19ன் படி தான் எங்களுடைய வாரிசு சான்றிதழ் மனு நிராகரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது வழக்கு பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.